JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **198/2014** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 1** | Prosecution /Defence / Court | |
| Name | செல்வி | Village | 103, கொத்தன்காடு, உப்பிலிபாளையம் ரோடு, சென்னிமலை |
| Husband's Name | அன்பழகன் | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 12.08.2025**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு சமையல் வேலை செய்து வருகிறேன். 10 வருடங்களுக்கு முன்பு வெள்ளிக்கிழமை காலை செங்கப்பள்ளிக்கு சமையல் வேலைக்கு நானும், எனது கணவரும் வந்தோம். எங்களுக்கு முன்பாகவே சாந்தி, சரஸ்வதி, ஜெயா ஆகியோர் அங்கு இருந்தார்கள். தெரட்டி நிகழ்ச்சி இரவு 12 மணிக்கு முடிந்தது. பேருந்து இல்லாததால் நாங்கள் அங்கயே தங்கி கொண்டோம். காலை 5.30 மணிக்கு செங்கப்பள்ளி பேருந்து நிறுத்திற்கு நானும் எனது கணவரும், சாந்தி, சரஸ்வதி, ஜெயா ஆகியோர்களும், மற்றொரு நபரும் மொத்தம் 6 பேர் வந்தோம். கிருஷ்ணவேல் என்பவர் ஆம்னி வேனில் வந்து எங்கு செல்ல வேண்டும் என்று எங்களை பார்த்து கேட்டார். நாங்கள் பெருந்துறை செல்ல வேண்டும் என்று சொன்னோம். பெருந்துறையில் எங்களை விடுவதாக சொன்னதன் பேரில் நாங்கள் 6 பேரும் கிருஷ்ணவேலின் ஆம்னிவேனில் ஏறி கொண்டோம். ஆம்னி வேன் பெருந்துறை நோக்கி வரும் போது வீரணம்பாளையம் வீ.பி. ஓட்டல் முன்பு வாகனத்தை வேகமாக முந்தி சென்ற போது லாரியின் மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது உடனடியாக 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி 108 ஆம்புலன்ஸ் வந்தவுடன் என்னை பெருந்துறை KMC

மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். என் கணவரையும் மற்ற 4 நபர்களையும் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றார்கள். சரஸ்வதி என்பவர் அன்றைய தினமே இறந்து விட்டார். என் கணவர் இரண்டு கால்களும் முறிந்துவிட்டது. நெஞ்சிலும் அடிப்பட்டு இரண்டு சிகிச்சையிலிருந்து பின்னர் இறந்துவிட்டார். மற்ற 3 நபர்களும் இரண்டு நாட்களில் இறந்ததாக கேள்விபட்டேன். எனக்கு விபத்தில் வலது கையிலும், முகத்திலும் காயம் ஏற்பட்டது. ஆம்னி வேன் பதிவு எண் தற்போது எனக்கு நினைவில்லை. ஆம்னி வேன் பேருந்து ஓட்டியவர் நீதிமன்றத்தில் இல்லை. தற்போது அவரது முகம் எனக்கு நினைவில்லை. பெருந்துறை போலீசார் என்னை விசாரிக்க நடந்த விவரங்களை கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** நாங்கள் ஏறிய ஆம்னிவேன் தினமலர் பத்திரிக்கையை ஒவ்வொரு பகுதிக்கும் கொண்டு சேர்க்கும் வேன் என்றால் சரிதான். ஆம்னி வேன் ஓட்டுநர் எங்களை அழைத்து வருவதற்கு பணம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். அந்த வேனில் 6 நபர்கள் பின்னாலும், 2 நபர்கள் முன்னாலும் அமருவதற்காக இருக்கை உள்ளது என்றால் சரிதான். நாங்கள் ஏறும் போது வேன் காலியாக இருந்தது. ஆட்கள் யாரும் இல்லை என்றால் சரிதான். ஆம்னிவேன் குன்னத்தூர் சென்று பேப்பர்களை போட்டுவிட்டு பின்னிட்டு பெருந்துறை வந்தது என்றால் சரிதான். தெரட்டி நிகழ்ச்சிக்கு சென்ற பகுதி எங்களுக்கு புதிதான பகுதி என்றாலும் இதற்கு முன்பு அங்கு சென்றதில்லை என்றாலும் சரிதான். அதனால் செங்கப்பள்ளியிலிருந்து வரும் போது எந்த வழியாக வந்தது என்று எங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதி எதுவென்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்திலுள்ள ரோடுகளும் எந்த திசையிலிருந்து எந்த திசைக்கு செல்கிறது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இரவில் தூக்கம் இல்லாததால் வேனில் நாங்கள் துாங்கி கொண்டு வந்தோம் என்றால் சரிதான். டமார் என்று சத்தம் கேட்ட பின்பு தான் விபத்து நடந்தது பற்றி தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அதனால் விபத்து எப்படி நடந்தது, எதனால் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து நடந்து 10 நிமிடத்தில் போலிசார் அங்கு வந்து விட்டார்கள் என்றால் சரிதான். போலீசார் வந்து தான் ஆம்புலன்ஸில் எங்களை மருத்துவமனைக்கு

அனுப்பிவைத்தார்கள் என்றால் சரிதான். விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனத்தின் பதிவெண்ணை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பெருந்துறை Krishna Medical மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது பெண் உதவி ஆய்வாளர் காலை 8 மணிக்கு என்னை விசாரித்தார் என்றால் சரிதான். அப்போது என்ன நடந்தது என கேட்டு என்னுடைய கைரேகை வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான். என்னிடம் வாங்கப்பட்ட கைரேகை வழக்கு பதிவு செய்யப்பட்டதற்காக பெறப்பட்டது என்றால் சரிதான். அதன் பின்னிட்டு இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் தூங்கி கொண்டு வந்ததால் யாருடைய தவறினால் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொல்ல முடியாது என்றால் சரிதான். எனக்கு இடம் புதிது என்பதால் இடம் குறித்து போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை

**அரசு தரப்பில் சாட்சி அ.சா. பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை**

**செய்ய அனுமதி கேட்டு அதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது.**

**(எதிரி ஆஜரில் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 ன் படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது).**